செய்தி வெளியீடு எண் : 013 நாள்: 03.01.2022

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் இன்று(03.01.2022) காலை 11.00 மணியளவில் சென்னை, நந்தனத்திலுள்ள ஒருங்கிணைந்த அலுவலக கூட்டரங்கில் வணிகவரி இணை ஆணையர்களின் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் தமிழ்நாட்டில் நடப்பாண்டின் நவம்பர் 2021 மாதம் முடிய மொத்த வருவாய் (இழப்பீட்டு தொகையுடன்) ரூ.66,047/- கோடி வசூல் ஆகி உள்ளது. இது முந்தைய ஆண்டு நவம்பர் 2020 வரை ஒப்பிடுகையில் 16.34 வளர்ச்சி விகிதமாகும்.

சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் வரி பாக்கி நவம்பர் 2021 வரை ரூ.10.66 கோடியும், சரக்கு மற்றும் சேவை வரிக்கு முந்திய வரிவிதிப்பு இனங்களின் கீழ் ரூ.141.93 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது.

வணிகவரித்துறையில் கடந்த நவம்பர் 2021 மற்றும் டிசம்பர் 2021 ஆகிய மாதங்களில் நுண்ணறிவுப் பிரிவு சுற்றும்படை அலுவலர்களால் 1,11,375 வாகனங்கள் மற்றும் 1,39,751 மின் வழிச்சீட்டுகள் தணிக்கை செய்யப்பட்டு 2,556 குற்றங்கள் கண்டறியப்பட்டன. அதன்மீது வரி மற்றும் அபராதத் தொகையாக ரூ.17.51 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது.

நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களால் மேற்கண்ட காலக்கட்டத்தில் 627 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ரூ.11.25 கோடி ரூபாய் வரி மற்றும் அபராதத் தொகையாக வசூல் செய்யப்பட்டது, மேலும் ஆய்வின் மூலம் போலி வணிகர்கள் கண்டறியப்பட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு வணிகவரித்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் வணிகர் நலவாரியம் சிறப்பாக செயல்படவும், நலவாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகப்படுத்தவும், இணைய வழி சேவையை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு வணிகர்கள் நலவாரியத்தில் செப்டம்பர் 2021 வரை சேர்வதற்கான கட்டணத்திலிருந்து விலக்களித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஆணை வெளியிடப்பட்டது. மேலும் இந்த ஆணை மார்ச் 2022 வரை நீட்டிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகை காரணமாக 40,442 உறுப்பினர்களாக இருந்த நலவாரியம் கடந்த 3 மாதங்களில் மட்டும் புதிய உறுப்பினர்களின் சேர்க்கையையொட்டி 87,741 உறுப்பினர்களாக உயர்ந்துள்ளது. இதில் கட்டணமின்றி சேர்க்கையின் மூலமாக 38,135 உறுப்பினர்களும், சேர்க்கை கட்டணம் செலுத்தி 2,307 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். மேலும் அவர்களுள் 8,544 உறுப்பினர்கள் தாங்களாகவே இணையதளம் மூலமாகவும், 31,988 உறுப்பினர்கள் இணை ஆணையர்(வ.வ.) மூலமாக சேர்ந்துள்ளனர்.

மேலும், கட்டணமின்றி உறுப்பினர் சேர்க்கைக்கான காலக்கெடுவை 31.03.2022 வரை நீட்டித்ததன் பயனாக புதிதாக சேர்ந்துள்ள உறுப்பினர்களுக்கு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (03.01.2022) உறுப்பினர் சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி (ம) பதிவுத்துறை அரசுச் செயலர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

. **வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**